வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019

## ஆண்டு 8

## மாதிரி வினாக்கள்

1. “எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்”

   இது எந்த நூலில் உள்ளது?

1. ஆத்திசூடி
2. மூதுரை
3. திருக்குறள்

**விடை:**

1. ஆத்திசூடி

2. அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ் வானொலி நிலையங்கள் இரண்டின் பெயர்களைக் கூறுக?

**<u>விடை:</u>**

**- தமிழ் முழக்கம்**

**- விசேட ஒலிபரப்புச் சேவை தமிழ் (SBS Tamil)**

**(- அவுஸ்திரேலியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனம்**

**- தாயகம் ஒலிபரப்புச் சேவை)**

3. “இளமையில் கல்வி சிலையில் எழுத்து”

என்ற முதுமொழியின் பொருளைக் கூறுக.

**<u>விடை:</u>**

**இளம் வயதில் கற்கின்ற கல்வி**

**கல்லில் வெட்டப்பட்ட எழுத்துப் போல**

**எப்பொழுதும் அழியாமல் இருக்கும்.**

4. வல்லின மெய் எழுத்துக்கள் எவை?

**<u>விடை:</u>**

**க் ச் ட் த் ப் ற்**

5. சங்ககாலத்தில் மூவேந்தர் என்று

போற்றப்பட்ட வம்சங்கள் எவை?

**விடை:**

சேர வம்சம்,

சோழ வம்சம்,

பாண்டிய வம்சம்.

(சேர - சோழ - பாண்டியர்)

6. ஐம்புலன்களும் எவை?

**விடை:**

பார்த்தல்

கேட்டல்

சுவைத்தல்

மணத்தல் (நுகர்தல்)

தொட்டுணர்தல் (தொடுதல்)

7. 75வது ஆண்டு நிறைவில்

கொண்டாடப்படும் விழா?

**<u>விடை:</u>**

# பவள விழா

8. ‘வெண்மை + தாமரை’

சேர்த்துக் கூறுக?

**<u>விடை:</u>**

**வெண்டாமரை**

9. ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற பாடலை இயற்றியவர் யார்?

**விடை:**

**கணியன் பூங்குன்றனார்**

10. தமிழர் பண்பாடுகள் மூன்றினைக் கூறுக?

**விடை:**

# தாய் தந்தையரைப் பேணுதல்

# வந்தாரை வரவேற்று விருந்தோம்புதல்

# பிறருக்கு உதவுதல்

# (பெற்றோர்களையும், பெரியோரையும், ஆசிரியர்களையும் மதித்தல்)

11. அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்ச் சஞ்சிகையின் பெயர் தருக.

விடை:

தமிழோசை

(தென்றல்,   மெல்லினம்,   இளவேனில்)

12. தமிழ் உயிர் எழுத்துக்களில் நெட்டெழுத்துக்கள் எவை?

**<u>விடை:</u>**

**ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ**

13. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையை இயற்றியவர்?

**விடை:**

# சீத்தலைச் சாத்தனார்

# (சாத்தனார்)

13. நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்ட சிறிய நிலப்பரப்பை எப்படி அழைப்பர்?

**விடை:**

# தீவு

15. முத்தமிழ்கள் எவை?

**விடை:**

**இயல் - இசை - நாடகம்**

**(இயற்றமிழ் - இசைத் தமிழ் - நாடகத் தமிழ்)**

16. தமிழில் எத்தனை உயிர் மெய் எழுத்துகள் உள்ளன?

**விடை:**

216

(12 x 18 = 216)

(இருநூற்றிப் பதினாறு)

17. சேர, சோழ, பாண்டிய மன்னர்களில் யார் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தவர்கள்?

**<u>விடை:</u>**

# பாண்டியர்கள்

18. குறிஞ்சி
முல்லை
மருதம்
பாலை

ஐவகை நிலங்களில் ஒன்று இங்கில்லை.

அதன் பெயரைக் கூறுக

**<u>விடை:</u>**

# நெய்தல்

19. சூரியன் என்ற சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொற்கள் இரண்டினைத் தருக?

**<u>விடை:</u>**

# கதிரவன், ஞாயிறு

# (பகலவன், கதிரோன், வெய்யோன், பரிதி)

20. தமிழர் கிராமிய நடனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

**விடை:**

**கரகம்**

**காவடி**

**(கும்மி, கோலாட்டம், மயிலாட்டம்)**

21. பின்வரும் பழமொழியை முடித்துவைக்கவும்.

முயற்சி உடையார் ………………….?

**<u>விடை:</u>**

## இகழ்ச்சி அடையார்

22. புலம் பெயர் தமிழர்கள் தமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் கட்டிக் காத்து வரும் இரண்டு முறைகளைக் கூறுக?

**விடை:**

கலை கலாசார நிகழ்வுகள்

ஆலயங்கள்

(தமிழ்ப் பாடசாலைகள், தமிழ்க் கலைகளைக் குழந்தைகளுக்குக் கற்பித்தல்)

23. இந்தியாவில் காவேரி (காவிரி) ஆற்றுக்குக் குறுக்கே ‘கல்லணை’ என்று சொல்லப்படும் கற்களால் ஆன அணையைக் கட்டுவித்த மன்னன் யார்?

**<u>விடை:</u>**

# கரிகாற் சோழன் (கரிகாலன்)

24. இடியப்பம் அவிப்பது போல

தோசை ........................

**விடை:**

# சுடப்படும் / சுடுவது

25. இந்த இசைக் கருவியின் பெயர் என்ன?



**<u>விடை:</u>**

# பறை